**PANASONIC CARBON INDIA CO. LIMITED**
CIN: L29142TN1982PLC009560
Regd. Office: Pottipati Plaza, 77 (Old No.35)
Nungambakkam High Road, Third Floor,
Nungambakkam,Chennai– 600 034.
Tel: 044-28275216, 044-28275226, Fax: 044-28263010

**10th August, 2018**

**To**
**BSE Limited,**
**Registered Office: Floor 25,**
**PJ Towers, Dalal Street,**
**Mumbai-400001**

**Dear Sir,**

**Ref: BSE Scrip code : 508941**

As required under Regulation 30 read with Schedule III (Part A) (12) of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements), Regulations, 2015. Please find enclosed copy of the advertisement as appeared in News today (English) and Malai Sudar (Tamil) on 09/08/2018.

We request you to kindly take the above information on record.

Thanking you,

Yours faithfully,

**For Panasonic Carbon India Co. Ltd**

P.Maheswari

**P.Maheswari**
**Company Secretary**

**Encl:a/a**

### ராஜாஜி மண்டபத்தில் கட்டுக்கடங்காத கூட்டம்

# விஜபிக்கள் பாதையில் நுழைந்ததால் விபரீதம்

## நெரிசலில் சிக்கி 4 பேர் பலியானது பற்றி உருக்கமான தகவல்

சென்னை, ஆக. 9:

**திமுக தலைவர் கருணாநிதியின் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக நேற்று ராஜாஜி மண்டபத்தில் கூட்டம் கட்டுக்கடங்காமல் வந்து கொண்டே இருந்தது. விஜபி பாதை வழியாக சென்ற போது ஏற்பட்ட நெரிசலில் 4 பேர் பலியானது பற்றி புதிய தகவல்கள் வெளியாகி உள்ளன.**

உடல் நலக்குறைவால் மறைந்த திமுக தலைவர் கருணாநிதியின் உடல் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக நேற்று சென்னை ராஜாஜி அரங்கில் வைக்கப்பட்டது. கருணாநிதியின் சொந்த ஊர் உட்பட பல்வேறு மாவட்டங்கள் மற்றும் வெளியூர்களில் இருந்தும் சென்னைக்கு சாரை சாரையாக மக்கள் படையெடுத்தனர். பொதுமக்கள் அஞ்சலிக்காக தனி வழியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், கருணாநிதியை கடைசியாக பார்த்து விட வேண்டும் என்ற ஆர்வத்தில் திரண்ட கட்டுக்கடங்காத மக்கள் கூட்டம், போலீசார் வைத்திருந்த தடுப்புக்களை தகர்த்துவிட்டு ஒருவரையொருவர் முண்டி அடித்துக்கொண்டு சென்றனர்.

முக்கிய பிரமுகர்கள் செல்லும் பாதையில் பொதுமக்கள் நுழைந்ததால், கூட்ட நெரிசல் ஏற்பட்டு, இருதரப்புக்கும் இடையில் தள்ளு முள்ளு ஏற்பட்டது. இதன்காரணமாக, ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி பலர் கீழே விழுந்து படுகாயமடைந்தனர். இதில், எம்.ஜி.ஆர். நகர் சூளைப்பள்ளத்தை சேர்ந்த செண்பகவள்ளி (வயது 60), எம்.ஜி.ஆர். நகரை சேர்ந்த வெங்கட்ராமன் (வயது 60), மதுரை மாவட்டம் காந்தி நகரை சேர்ந்த துரை (வயது56), சரவணன் (வயது 37) ஆகிய 4 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இவர்களில் சரவணனின் முகவரியை அடையாளம் காண்பதில் சிக்கல் எழுந்துள்ளது.

உயிரிழந்த 4 பேரின் உடல்களும் சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை முடிந்து இன்று மாலையில் அவரவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என போலீசார் தெரிவித்துள்ளனர்.

மேலும், படுகாயமடைந்த 7 பேருக்கு ராஜீவ்காந்தி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது. இவர்களில் ஒருவரது நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. காயமடைந்த 54 பேரும் சிகிச்சை முடிந்து வீடு திரும்பினர். இது குறித்து திருவல்லிக்கேணி உதவி கமிஷனர் ஆரோக்கிய பிரகாசம் தலைமையிலான போலீசார் வழக்குப்பதிந்து தீவிர விசாரணை நடத்திவருகின்றனர்.



நெரிசலில் சிக்கி காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை போலீஸ் கமிஷனர் ஏ.கே.விஸ்வநாதன் நேரில் பார்த்து ஆறுதல் கூறினார்.

### திருவரங்கம் கோயில் சிலை மாற்றம்: ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஆக.9:

திருச்சி திருவரங்கம் கோயிலில் இருந்த சிலைகள் மாற்றப்பட்டதா? என்பது குறித்து விசாரித்து ஆறு வாரத்தில் அறிக்கை தாக்கல் செய்யும்படி, சிலை கடத்தல் தடுப்பு சிறப்பு பிரிவுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு இன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது திருவரங்கம் கோயில் சிலை கடத்தல் தொடர்பாகவும், ஆயிரங்கால் மண்டபத்தையும் ஆய்வு செய்து இன்னும் 6 வாரத்தில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று சிலை கடத்தல் தடுப்பு பிரிவுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.



செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கடம்பூர் ராஜு குடும்பத்தினருடன் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியை சந்தித்து தனது மகன் திருமண அழைப்பிதழை கொடுத்தார்.

### கருணாநிதி மறைவு: காங்கிரஸ் ஒரு வாரம் துக்கம்

சென்னை, ஆக. 9:

திமுக தலைவரும் முன்னாள் தமிழக முதல்வருமான கருணாநிதி இயற்கை எய்தியதையொட்டி தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் ஒரு வார காலம் துக்கம் அனுஷ்டிக்கப்படுவதால் 8.8.2018 முதல் வருகிற 14.8.2018 வரை தமிழக காங்கிரஸ் கட்சியின் சார்பில் நடைபெற இருந்த அனைத்து நிகழ்ச்சிகளும் ரத்து செய்யப்படுகின்றன.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் சு. திருநாவுக்கரசரின் அனைத்து நிகழ்ச்சிகளும் 14.8.2018 வரை ரத்து செய்யப்படுகின்றது.

இவ்வாறு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### கருணாநிதி குடும்பத்தினர் முழு ஒத்துழைப்பு தந்தனர்

# பம்பரமாக சுழன்று இறுதி பணிகளை செய்தார் அமுதா

சென்னை, ஆக.9:

**கருணாநிதியின் உடல் அடக்கம் செய்வதற்கான பணிகளை ஐஏஎஸ் அதிகாரி அமுதா பம்பரமாக சுழன்று செய்ததன் மூலம் அனைவரின் பாராட்டையும் பெற்றிருக்கிறார்.**

கருணாநிதியின் உடல் அடக்க நிகழ்ச்சிக்கு அவரது குடும்பத்தினர் நல்ல ஒத்துழைப்பு தந்தார்கள் என ஐஏஎஸ் அதிகாரி அமுதா கூறியுள்ளார்.

அண்ணா நினைவிடம் அருகே கருணாநிதியின் உடல் அடக்கத்திற்கான பணிகள் நேற்று மாலை நடைபெற்று கொண்டிருந்த போது வெள்ளை நிறத்தில் சுடிதார் அணிந்த ஒரு பெண் மிகவும் சுறுசுறுப்பாக அங்கும் இங்கும் ஓடி கொண்டிருந்தார். இவர் யார் என்று அனைவரும் வியப்புடன் பார்த்து கொண்டிருந்தார்கள். ஐஏஎஸ் அதிகாரியான இவரிடம் தான் உடல் அடக்கத்திற்கான ஏற்பாடுகளை செய்யும் பணி ஒப்படைக்கப்பட்டிருந்தது பின்னர் தெரிய வந்தது.



இது குறித்து அமுதா கூறுகையில், காலை 8 மணியளவில் இந்த பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக தகவல் தெரிவிக்கப்பட்டது. 10.30 மணிக்கு நீதிமன்ற உத்தரவு கிடைத்தது. உடனே நான் சுறுசுறுப்படைந்து அந்த இடத்திற்கு விரைந்தேன். எல்லா நிகழ்ச்சிகளையும் சுமூகமாக செய்து முடிக்கும் வகையில் திட்டங்களை வகுத்து செயல்பட்டேன். காலை 11.00 மணியளவில் உடல் அடக்கம் செய்யும் இடத்தை சுத்தம் செய்யும் பணியில் சிலரே ஈடுபடுத்தப்பட்டனர். அந்த இடத்தை அளந்து நான் குறியீடு செய்தேன். கூட்டத்தினரை உள்ளே அனுமதிக்காத வகையில் தடுப்புகள் அமைக்குமாறு கேட்டு கொண்டேன். திமுக நிர்வாகிகள் ஏ.வ.வேலு, சேகர்பாபு உள்ளிட்டோர் அந்த இடத்திற்கு வந்து தேவையான உதவிகளை செய்தனர். கடைசி நேரத்தில் கருணாநிதியின் குடும்பத்தினருடன் நான் பேசி புரோட்டகல் முறைகளை எடுத்து கூறினேன். அவர்களும் நான் சொன்னவாறு கேட்டு முழு ஒத்துழைப்பு தந்தனர்.

கருணாநிதி முதலமைச்சராக இருந்த போது நான் அவருடன் பணியாற்றி இருக்கிறேன். அவரை போலவே எல்லா தலைவர்கள் மீதும் எனக்கு பற்று உண்டு. கருணாநிதி பதவிக்காலத்தில் தான் நான் உதவி கலெக்டராகவும், கலெக்டராகவும் பதவி உயர்வு பெற்றேன். என்னிடம் ஒப்படைக்கப்படும் எல்லா பணிகளையும் திறம்பட செய்துள்ளேன். அதை போலவே இந்த பணியையும் நான் செய்து முடித்தது திருப்தியாக இருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

### தூத்துக்குடி சம்பவம் குறித்து ஐநாவில் பேச்சு

# திருமுருகன் காந்தி கைது: வைகோ கண்டனம்

பெங்களூரு, ஆக.9:

**ஐக்கிய நாடுகள் சபையில் உரை நிகழ்த்திவிட்டு நாடு திரும்பிய மே 17 இயக்கம் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தியை பெங்களூரு விமான நிலையத்தில் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.**

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டத்தின் போது நிகழ்த்தப்பட்ட துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக மே 17 இயக்கம் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி ஐக்கிய நாடுகள் சபையில் உரை நிகழ்த்தினர். இதனைத் தொடர்ந்து இன்று அவர் நாடு திரும்பினர். இந்நிலையில் பெங்களூரு விமான நிலையத்தில் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்நிலையில் இது தொடர்பாக மே 17 இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில், திருமுருகன் காந்தி தூத்துக்குடி ஸ்டெர்லைட் படுகொலைக்கு நீதி கேட்டு ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தில் பதிவு செய்துவிட்டு திரும்பிய போது, பெங்களூர் விமான நிலையத்தில் வைத்து இன்று அதிகாலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

வரும் ஞாயிறு அன்று பெங்களூரில் மே பதினேழு இயக்கத்தின் சார்பாக கருத்தரங்கம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் பெங்களூர் விமான நிலையத்தில் இன்று காலை வந்து இறங்கினார்.

இந்நிலையில் தூத்துக்குடி படுகொலையை ஐ.நா.வில் பேசியதற்காக பழைய போராட்ட வழக்குகளை காரணம் காட்டி திருமுருகன் காந்தியை பெங்களூரில் கைது செய்துள்ளனர்.

அவர் மீது தேச துரோக வழக்கு உள்ளதால் எந்த விமான நிலையத்திற்கு வந்தாலும் கைது செய்யலாம் என லுக்-அவுட் நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளதாக கைது செய்த காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**வைகோ**

இது குறித்து வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில், திருமுருகன் காந்தியின் பாசிச வெறியாட்டம் போடும் மத்திய அரசும், அதற்குக் குற்றேவல் செய்யும் தமிழக அரசும் திருமுருகன் காந்தியின் குரலை ஒடுக்க வேண்டும் என்று திட்டமிட்டு உள்ளன. அதன் விளைவாகத்தான் கர்நாடக காவல்துறையைப் பயன்படுத்தி பெங்களூரில் கைது செய்துள்ளனர்.

இதற்குக் கடுமையான கண்டனத்தைத் தெரிவிப்பதுடன், திருமுருகன் காந்தியை உடனே விடுதலை செய்ய உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறேன் என்று கூறியுள்ளார்.

### கேபிள் டிவி ஆப்பரேட்டர் மீது சரமாரி தாக்குதல்

சென்னை, ஆக. 9:

**தண்டையார்பேட்டையில் கேபிள் டிவி ஆப்பரேட்டர் மீது கொலைவெறி தாக்குதல் நடத்திய மர்மநபர்களை போலீசார் தீவிரமாக தேடிவருகின்றனர்.**

**தண்டையார்பேட்டை நேதாஜி நகர் மெயின் தெருவை சேர்ந்தவர் தியாகராஜன் (வயது 45). இவர் இதே பகுதியில் கேபிள் டிவி அலுவலகம் நடத்திவந்தார். இதனிடையே, நேற்றிரவு 9.30 மணியளவில் தனது அலுவலகம் முன்பு நின்றபடி அவரது நண்பர் கனிராஜுடன் பேசிக்கொண்டிருந்துள்ளார். அப்போது, பைக்கில் வந்த 3 பேர் உடன் கையில் எடுத்துவந்த இரும்பு ராடு கொண்டு தியாகராஜனை கண்மூடித்தனமாக தாக்கினர். சத்தம்கேட்டு பொதுமக்கள் கூடவே மர்மநபர்கள் தப்பியோடியுள்ளனர். ரத்தவெள்ளத்தில் கிடந்த தியாகராஜனை பொதுமக்கள் மீட்டு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.**

**மர்ம ஆசாமிகளின் கொலைவெறி தாக்குதலில், படுகாயடைந்த தியாகராஜனின் தலையில் மட்டும் 25 தையல்கள் போடப்பட்டுள்ளன. உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ள அவருக்கு தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது. இது குறித்து, வழக்குப்பதிந்துள்ள ஆர்.கே.நகர் போலீசார் அப்பகுதியிலுள்ள சிசிடிவி கேமரா பதிவை ஆதாரமாக கொண்டு மர்ம ஆசாமிகளை தேடிவருகின்றனர்.**

### செங்குன்றத்தில் திமுக சார்பில் நடந்தது

# கருணாநிதிக்கு இரங்கல் தெரிவித்து மவுன ஊர்வலம்

## பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பு



செங்குன்றம், ஆக.9:

**முன்னாள் முதல்வர் திமுக தலைவர் கலைஞர் கருணாநிதியின் மறைவையொட்டி செங்குன்றம் பேரூர் திமுக சார்பில் இரங்கல் தெரிவித்து மவுன ஊர்வலம் நடத்தப்பட்டது.**

இந்நிகழ்ச்சியில் பேரூர் கழக செயலாளர் ஜி.ராஜேந்திரன், கருப்புக்கொடி ஏற்றிவர பெரியார் சிலை தொடங்கி மார்க்கெட் வழியாக நேதாஜி சிலை வரை சென்ற ஊர்வலம் பஸ் நிலையம் அருகே அண்ணா சிலை அருகே நிறைவு பெற்றது. ஊர்வலத்திற்கு முன்னாள் மாவட்ட அவைத் தலைவர் மா.துரைசாமி தலைமை தாங்கினார்.

கண்ணீர் அஞ்சலி கூட்டத்தில் மாநில அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்க தலைவர் துரைசிங்கம், கதிர்வேலன், கே.ஆர்.லோகநாதன், மாதேஷ், டி.கோபி, பாஸ்கர், திராவிடமணி, செல்வகுமார், செந்தில்குமார், சண்முகவேல், ரியாஸ் பாஷா, அக்பர், ஜபருல்லா, அப்பு, திருநாவுக்கரசு, சீனிவாசன் மற்றும் ஆர்.விப்ரநாராயணன், ஏ.பாபு, ஆர்.டி.குமார், ஜெ.ரகுமார், ஆர்.சீனிவாசன், முனிஸ்வரி சுகுமார், என்.சந்திரகுமார், ஏ.கோபால், கே.கபிலன், பி.செல்வம், லெனின் குமார், டி.செல்வம்,கே.கே.ராமன், உள்பட பலர் கலந்துகொண்டனர்.

செங்குன்றம் மார்க்கெட் கடைகள் அனைத்தும் மூடப்பட்டது. நெல் மார்க்கெட், அரிசி மார்க்கெட், டீக்கடை, ஓட்டல்கள் என எல்லா வணிக நிறுவனங்களும் மூடப்பட்டு கருணாநிதிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

### பரங்கிமலை ரெயில் பாதை நகர்த்திவைக்கும் பணி தொடக்கம்

சென்னை, ஆக. 9:

பரங்கிமலை ரெயில் விபத்தையடுத்து, ரெயில்வே அதிகாரிகளின் முன்னிலையில் தண்டவாளத்தின் இருப்பு பாதையை நகர்த்திவைக்கும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சென்னை கடற்கரை - திருமால்பூர் மின்சார ரெயில், பரங்கிமலை ரெயில் நிலையத்திற்குள் நுழையும் போது ரெயில் படிக்கட்டில் பயணம் செய்த 5 பேர் பக்கவாட்டு சுவரில் மோதி பரிதாபமாக உயிரிழந்தனர். கடந்த 24-ம் தேதி நடந்த இந்த விபத்தில் 10-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்த விபத்துக்கு ரெயில் நிலையத்தில் உள்ள பக்கவாட்டு தடுப்புச்சுவர் தான் காரணம் என குற்றச்சாட்டு எழுந்தது. இதையடுத்து, சம்பவ இடத்தை ரெயில்வே பாதுகாப்பு ஆணையர் கே.ஏ.மனோகரன் முன்னிலையில், ரெயில்வே அதிகாரிகள் உள்ளிட்டோர் ஆய்வு நடத்தினர். இந்த நிலையில், விபத்து நடந்த பரங்கிமலை ரெயில் நிலையத்தின் பிளாட் பாரத்தின் அகலத்தை குறைத்து, தண்டவாளத்தின் இருப்பு பாதையை சற்று நகர்த்திவைக்கும் பணி தொடங்கியது. ரெயில்வே அதிகாரிகள் முன்னிலையில், ஊழியர்கள் இப்பணிகளை மேற்கொண்டுவருகின்றனர்.

### லாரி ஓனரை கொலை செய்து தலைமறைவு

# 18 ஆண்டுகளுக்கு பின் கொலையாளி கைது

## புழல் சிறையில் அடைக்கப்பட்டார்

திருவள்ளூர், ஆக. 9:

**மகளின் நிச்சயதார்த்தத்திற்கு பணம் தர மறுத்த லாரி உரிமையாளரை கொலை செய்து விட்டு, 18 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்த லாரி ஓட்டுனரை போலீசார் கைது செய்து புழல் சிறையில் அடைத்தனர்.**

இந்த சம்பவம் குறித்து போலீஸ் தரப்பில் கூறப்படுவதாவது:-

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி சிப்காட் பகுதிசேர்ந்தவர் தவர்சிங். இவர் லாரி உரிமையாளர். இவரிடம் மங்குபாய் லாரிஓட்டுனராகவும், கிளினீராக பிரேம் சந்த் பணியாற்றி வந்துள்ளனர். இந்த நிலையில் லாரி டிரைவர் மங்குபாய் தனது மகளின் திருமணத்திற்கு தவர்சிங்கிடம் பணம் கேட்டராம். அதற்கு அவர் மறுத்துள்ளதாக கூறப்படுகிறது. இந்தநிலையில், கடந்த 2000ம் ஆண்டு லாரி உரிமையாளர் தவர்சிங், லாரி ஓட்டுநர் மங்குபாய், கிளீனர் பிரேம் சந்த் ஆகிய 3 பேரும் அந்த பகுதியில் உள்ள ஏரியில் குளித்துள்ளனர். அப்போது, லாரி ஓட்டுநர் மங்குபாய், தமது மகளின் நிச்சயதார்த்தத்திற்கு பணம் கேட்டாராம். அதற்கு லாரி உரிமையாளர் தவர்சிங் மறுத்துள்ளார். இதில் ஆத்திரமடைந்த மங்குபாய் தவர்சிங்கை இரும்பு ராடால் தலையில் அடித்து விட்டு, அவர் வைத்திருந்த ரூ.50000 பணத்தை எடுத்து கொண்டு, அவரது உடலை ஏரிக்கரையிலேயே பெட்ரோல் ஊற்றி எரித்துவிட்டு மங்குபாயும் பிரேம்சந்தும் சென்றுள்ளனர்.

இந்த வழக்கு தொடர்பாக திருவள்ளூர் போலீசார் கொலையாளிகளை தேடிவந்த நிலையில், லாரி கிளீனர் பிரேம் சந்தை கைது செய்தனர்.

மேலும் தலைமறைவான முக்கிய குற்றவாளியான மங்குபாய் மஹாராஷ்டிராவில் பதுங்கியிருப்பதாக வந்த தகவலின்படி தனிப்படை போலீசார் கைது செய்து புழல் சிறையில் அடைத்தனர். 18 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்த கொலை குற்றவாளியை போலீசார் கைது செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


**மாண்பமை கோட்டாட்சியர் நீதிமன்றம் உட்கோட்டம் மதுராந்தகம், காஞ்சிபுரம்**

புட்டியம்மாள் க/பெ செல்வராஜ்
பஜனை கோவில் தெரு,
புத்தூர் கிராமம்,
செய்யூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம். ...மனுதாரர்

எதிர்

வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
செய்யூர். ...எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் ஆகிய நான் எனது தந்தை கோவிந்தசாமி த/பெ ராகவன் என்பவரின் இறப்பு சான்றிதழ் வேண்டி கனம் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தை கோவிந்தசாமி த/பெ ராகவன் என்பவர் கடந்த 03.07.1995 அன்று மேற்படி புத்தூர் கிராமம், செய்யூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் என்ற முகவரியில் இறந்துவிட்டார். எனது அறியாமையின் காரணத்தினால் எனது தந்தையின் இறப்பை நான் அரசு பதிவேட்டில் பதிவு செய்ய தவறிவிட்டேன். ஆகவே எனது தந்தையின் இறப்பை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் கனம் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் கனம் நீதிமன்றத்தின் வாயிலாக என்னை விசாரணை செய்து, எனது தந்தையின் இறப்பு சான்றிதழ் வழங்கப்படும் என்பதை அறியவும்.

இப்படிக்கு
புட்டியம்மாள் க/பெ செல்வராஜ்
பஜனை கோவில் தெரு,
புத்தூர் கிராமம்,
செய்யூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்..

**பேனஸானிக் கார்பன் இந்தியா கம்பெனி லிமிடெட்**

(CIN: L29142TN1982PLC009560)
பதிவு அலுவலகம்: ''பொட்டிபட்டி பிளாசா'', 3-வது தளம்,
எண். 77, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-600 034.
Ph:044-28275216/26, Fax:044-28263010. website:www.panasoniccarbon.co.in

31.06.2018 அன்றுடன் முடிந்த காலாண்டுக்கான தனிப்பட்ட தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் பற்றிய அறிக்கை
(ரூபாய் லட்சங்களில்)

| விவரங்கள் | முடிந்த காலாண்டு 30.06.2018 | முடிந்த காலாண்டு 30.06.2017 |
|---|---|---|
| மொத்த வருமானம் | 1,409.27 | 1,373.76 |
| நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / நஷ்டம் (வரி மற்றும் விலக்கு பெற்ற ரகங்களுக்கு முந்தையது) | 488.04 | 475.75 |
| நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / நஷ்டம் (வரிக்கு முந்தையது, மற்றும் விலக்கு பெற்ற ரகங்களுக்கு பிந்தையது) | 488.04 | 475.75 |
| நடப்பு காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பிந்தையது மற்றும் விலக்கு பெற்ற ரகங்களுக்கு பிந்தையது) | 343.02 | 306.66 |
| நடப்பு காலத்துக்கான மொத்தம் விரிவான வருவாய் | Nil | 5.69 |
| சம பங்கு மூலதனம் (பங்கு ஒன்றின் முகமதிப்பு ரூ.10/-) | 10.00 | 10.00 |
| பங்கு ஒன்றின் வருவாய் தலா ரூ.10/- அடிப்படை (வருடாந்திரப்படுத்தப்படாதது) | 7.15 | 6.39 |
| பங்கு ஒன்றின் வருவாய் தலா ரூ.10/- திட்டம் குறைந்தது (வருடாந்திரப்படுத்தப்படாதது) | 7.15 | 6.39 |

குறிப்பு:
1. 30.06.2018 அன்றுடன் முடிந்த காலாண்டு / ஆண்டுக்கான மேற்காணும் முடிவுகள் தணிக்கையாளர்கள் குழுவால் மறு ஆய்வு செய்யப்பட்டு 08.08.2018 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது. அவைகள் கம்பெனியின் சட்டப்பூர்வ ஆடிட்டர்களின் குறிப்பிட்ட மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.
2. மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான படிவத்தின் சுருக்கமான அறிக்கையாகும். மேற்சொன்ன காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் பங்கு வர்த்தக நிறுவனத்தின் www.bseindia.com என்ற இணைய தளத்திலும், கம்பெனியின் www.panasoniccarbon.co.in என்ற இணையதளத்திலும் காணலாம்.

பேனஸானிக் கார்பன் இந்தியா கம்பெனி லிமிடெடுக்காக
ஆர்.செந்தில் குமார்
நிர்வாக இயக்குனர்

இடம் : சென்னை
தேதி : 08.08.2018

# India and innovation go hand-in-hand now

### ◆ Climbs GII ladder for third year in a row
### ◆ Govt, industry must work together to promote R&D: Niti Adviser

| NT Bureau/Agencies |


New Delhi, Aug 9:

Government and industry must synergise their efforts to promote R&D and innovation in the country, said Principal Adviser to Niti Aayog Ratan P Watal. He said this after the country saw improvement in the Global Innovation Rank in a report released by Global Innovation Index (GII).

'The culture of spending on research and development is growing in India and we are seeing the results in the form of improvements in rankings such as the Global Innovation Rank (GII),' Watal said.


India has improved its ranks on the Global Innovation Index by three places to 57 in 2018 from 60th position last year, according to the 'Global Innovation Index 2018, Energizing the World with Innovation' report.

India ranked well in several important innovation inputs, including graduates in science and engineering, expenditures of major R&D-intensive global companies and capital formation, the report said. Switzerland, the Netherlands, Sweden, the UK, Singapore, the US, Finland and Denmark lead the 2018 rankings in GII.



**SINCE MODI'S ARRIVAL...**

**India has moved 24 spots in the GII rankings since Narendra Modi became the Prime Minister of the nation. However, India still lags in ease of starting a business, political stability and safety, and female employees with advanced degrees in the workforce. But, what comes as a good news is that India has maintained the position as the top exporter of IT services globally. The country ranked 60th position in 2017 on GII rankings. In 2014-15, India was ranked 81st. China broke into the world's top 20 most-innovative economies as Switzerland retained its number-one spot in the index.**



Ratan P Watal

> India ranked well in several important innovation inputs, including graduates in science and engineering, expenditures of major R&D-intensive global companies and capital formation

Among the indicators of innovation outputs, India ranked first in the world in ICT services exports, whereas labour productivity growth, where it is fourth globally.

According to report, India ranked second among middle-income economies (after China) in the indicators that capture the quality of the innovation inputs and outputs.

'This year, its rankings are edging slightly closer to those of China, testifying the important efforts that the country is making in boosting innovation,' the report said.

It also pointed out that in particular, India ranked well in the quality of its scientific publication and local universities, because of higher scores for the Indian Institute of Science Bangalore and the Indian Institute of Technology.

Rounding out the GII 2018 top 10 are: the Netherlands, Sweden, the UK, Singapore, the US, Finland, Denmark, Germany and Ireland. China's ranks at number 17the on the list.

## HOW IT WORKS


**The GII indicators are grouped into innovation inputs and outputs. Innovation inputs capture the efforts made by the country to boost innovation.**

**Innovation outputs measure the results of these efforts in terms of scientific publications, patents, trademarks, production, exports and other outputs.**

**As per the report, over the past three years, India has improved its ranking in innovation outputs, reaching the 57th position this year, up from the 58th in 2017 and the 59th in 2016. India's innovation inputs also improved, ranking 63rd up from 66th and 72nd positions in the past two years.**

## BIZ BYTES

## EID Parry sees mild losses in Q1



| NT Bureau |

Chennai, Aug 9:

EID Parry (India) Limited, manufacturer of Sugar, has reported financial results for the quarter ended 30 June. The results stated that the consolidated revenue from operations for the quarter was Rs 3,363 crore registering a decline of 0.4 per cent.

Earnings before depreciation, interest and taxes (EBITDA) and before exceptional item for the quarter was Rs 83 crore registering a decrease of 58 per cent in comparison to the corresponding quarter of previous year profit of Rs 196 crore. Consolidated loss after tax and non-controlling interest was Rs 195 crore compared to Rs 9 crore in the previous year.

The Standalone revenue from continuing operations for the quarter was Rs 456 crore in comparison to the corresponding quarter of previous year of Rs.474 Crore.

The Consolidated Sugar operations reported an operating loss of Rs 180 crores (corresponding quarter of previous year: Loss of Rs.22 Crores) for the quarter.

## Air India Belagavi-Bengaluru flight to fly daily



| NT Bureau |

Chennai, Aug 9:

Air India has said it has increased the frequency of its Belagavi-Bengaluru flight from three days to a daily flight. AI has said it has taken the measure to further strengthen its air connectivity.

Alliance Air, the wholly owned subsidiary of Air India, operates on this sector on Tuesdays, Wednesdays and Saturdays with an ATR 72 aircraft. Air India is all set to operate an Airbus-319 aircraft on the remaining four days Mondays, Thursdays, Fridays and Sundays from 10 August to meet the heavy demand on this sector, a release said.

The flight from Bengaluru to Belagavi and return will operate with economy and business class configuration on the Airbus-319 aircraft. Flight AI 585 will leave Bengaluru at 0725 hours to reach Belagavi at 0830 hrs and the return flight will leave Belagavi at 0930 hrs to arrive in Bengaluru at 1030 hrs. This additional connection by Air India will lend a further boost to the national carrier 'Connect India' mission, the carrier said.

## IKEA opens first store in country

Hyderabad, Aug 9 (PTI):

Swedish home furnishings major IKEA today opened its first store in India, kicking off its retail journey five years after it received approval to invest in the country's single-brand retail sector.

The company, which has employed 950 people directly and another 1,500 indirectly at its store, plans to hire 15,000 in the coming years as it expands operations in India.

IKEA Group CEO Jesper Brodin said the opening of the first store in India marks a milestone in the company's journey here which began over three decades ago through sourcing of products. 'We have a long term commitment to India, which is an important market for us,' he added.

The store here is the first of 25 such outlets planned to be set up in India by 2025. In 2013, IKEA received nod from the government to invest Rs 10,500 crore in single-brand retail.

IKEA had originally planned to open its first store in India by 2017, but it was delayed. The opening of its first store here was scheduled for 19 July this year but the company again pushed it back by almost 20 days to 9 August, citing quality commitments.

Out of the total outlay of Rs 10,500 crore, the company has so far invested Rs 4,500 crore in its different projects in India. It has invested Rs 1,000 crore on the Hyderabad store alone, which would have a range of around 7,500 products. The store is spread over 13 acres of land and has a built up area of 4 lakh sq ft.

The company said it would increase its investments in India as it looks to accelerate expansion in the country faster than it would usually do elsewhere.

## DoT issues direction to implement net neutrality

New Delhi, Aug 9 (PTI):

The Telecom Department has amended licence rules by incorporating clauses related to net neutrality which bar service providers from discriminating against internet content and services by blocking, throttling or granting preferential higher speeds.

A licence amendment note of DoT directing its various licensing division said the government is committed to the fundamental principles and concepts of net neutrality.


**MARG PROJECTS AND INFRASTRUCTURE LIMITED**
Regd. Office: Sri Sai Subhodhaya Apartments, Basement, No.57/2B, East Coast Road, Thiruvanmiyur, Chennai – 600 041
Tel : +91-7825888141
Email:mpil@marggroup.com website : www.margprojects.com
CIN : L65991TN1993PLC025252

NOTICE OF BOARD MEETING

Notice is hereby given that pursuant to 29 read with Regulation 47 of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations 2015, a meeting of the Board of Directors of the Company will be held on Tuesday, the 14th August, 2018 at the Registered Office of the Company at "Sri Sai Subhodhaya Apartments, Basement, No. 57/2B, East Coast Road, Thiruvanmiyur, Chennai- 600 041" inter-alia to consider and approve the Unaudited Financial Results for the Quarter ended 30th June, 2018.

Sd/-
G Srinivasa Reddy

Date: 09.08.2018
Place: Chennai

**NAME CHANGE**

I, NEELAMANI KOKILA, D/o Neelamani, born on 01.03.2000, residing at No.48, Jeyandra Saraswathi Nagar, Amudham Colony, Nandivaram, Guduvancherry, Kancheepuram, Tamilnadu, Dist - 603202, India, shall henceforth be known as GIVEN NAME: KOKILA. SUR NAME: NEELAMANI.

NEELAMANI KOKILA.

**CHANGE OF NAME**

I, Jude Nishanth, S/o G.Pushparaj, born on 13.01.1997 residing at No.127/36, Santhiappan Street, Ottery, Chennai-600012 shall hence forth be Known as JUDE NISHANTH PUSHPARAJ - Jude Nishanth

Jude Nishanth

**NAME CHANGE**

I, RAVINDRAN M, S/o Manimuthu, residing at D1/25, Malligai Apartment, 6th Main Road, Mogappair, Eri.Scheme, Mogappair - 600037, shall hence forth be known as RAVEENDRAN AM.

RAVINDRAN M.

**NAME CHANGE**

I, ALBERTGEORGE, S/o George Daniel, born on 01.01.1984, residing at Plot No.3, Door No.5/1248A, Sethupathy Nagar, Madipakkam, Chennai - 600 091, shall henceforth be known as GIVEN NAME: ALBERT. SURNAME: GEORGE.

ALBERTGEORGE.

Read NEWS TODAY Every Evening

**BHARAT TEXTILES & PROOFING INDUSTRIES LIMITED**
Regd.off: No.994, Sathyavedu Road, Suravalikandigai Sirupuzhalpet, Gummidipoondi - 601 201
CIN: L17111TN1990PLC020072

NOTICE

Notice is hereby given that the Meeting of the Board of Directors of the Company is scheduled to be held on Tuesday, the 14th August, 2018 at No.39 Anna salai, 205 ABC trade Center, Inside Devi Theater Compound, Chennai-600002 to consider among other matters, Unaudited Financial Results for the Quarter ended on 30th June, 2018.

For Bharat Textiles & Proofing Industries Limited
(Sd/-)
Ajeet Kumar Bhandari
Managing Director

Place : Chennai
Date : 09.08.2018

**ACCEL LIMITED**
(Formerly known as "Accel Transmatic Limited")
CIN : L30007TN1986PLC100219
Regd & Corp. Office: III Floor, SFI Complex, 178, Valluvar Kottam High Road, Nungambakkam, Chennai-600034, Phone: 044-28222262,
Email: companysecretary@accel-india.com
Website: www.acceltransmatic.com

NOTICE

NOTICE is hereby given that pursuant to Regulation 29 read with Regulation 47 of the SEBI (Listing Obligation and Disclosure Requirements) Regulations, 2015, a meeting of the Board of Directors of the Company will be held on Tuesday, 14th August 2018 to consider and approve the unaudited Financial Results of the Company for the quarter ended 30th June 2018 inter alia amongst other matters.

The said intimation is also available on the company's website at www.acceltransmatic.com and on the website of the Stock Exchange at www.bseindia.com.

By the Order of the Board
for Accel Limited
N.R. Panicker

Chennai
09.08.2018

**REFEX INDUSTRIES LIMITED**
Reg. Off: No 67, Bazullah Road, T.Nagar, Chennai – 600 017
CIN: L45200TN 2002PLC049601
Tel.: +91-44-43405950
E Mail: admin@refex.co.in
Website: www.refex.co.in

NOTICE

Notice is hereby given that pursuant to Regulation 29 read with Regulation 47 of the SEBI (Listing Obligation and Disclosure Requirements) Regulations 2015, a meeting of the Board of Directors of the Company will be held at the Registered Office of the Company: No, 67, Bazullah Road, T. Nagar, Chennai - 600 017 on Monday, the 13th August , 2018 inter alia to consider and approve the Unaudited Financial Results of the Company for the Quarter ended 30th June, 2018.

Further in accordance with the Company's Code of Conduct for Prevention of Insider Trading, the "Trading Window" for dealing in the shares of the Company will remain closed from 4th August, 2018 to 17th August, 2018 (both days inclusive).

The said intimation will be available on the website of the Company at www.refex.co.in as well as on the website of BSE at www.bseindia.com and NSE at www.nseindia.com.

For Refex Industries Limited
S Gopalakrishnan
Company Secretary

Place: Chennai
Date: 04.08.2018

**IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS**
(Testamentary and Intestate Jurisdiction)
O.P. No. 222 of 2017

In the matter of the Indian Succession Act (Act XXXIX of 1925) and
In the matter of the Certified copy of Last Will and Testament of late. S.S.Mariappa Nadar

1. Usha Rani, W/o. Late S.M. Nagarajan, No. 2, 11th Block, Bharath Dasan Street, Mogappair East, Chennai-600 037.
2. N. Ramya Priyadarshini, D/o Late S.M. Nagarajan, No.2, 11th Block, Bharathi Dhasan Street, Mogappair East, Chennai-600 037.
3. N. Shylender, S/o Late S.M. Nagarajan, No.2, 11th Block, Bharathi Dhasan Street, Mogappair East, Chennai-600 037.

... Petitioners

- Vs -

1. Madurai Veeran, S/o Late. S.S. Mariappa Nadar, No.159, Thiruvottriyur High Road, Kaladipet, Chennai-600 019.
2. T. Rajeshwari, W/o Mr. Thirunavukarasu, Kumaraguru Illam, No. 59, 5th Street, Kaliash Sector, Kaladipet, Chennai-600 019.
3. K. Kasthuri, W/o Mr. Ravi, Kumaraguru Illam, No. 59, 5th Street, Kaliash Sector, Kaladipet, Chennai-600 019.
4. K. Pavalakodi, W/o Mr. R.Kannan, Kumaraguru Illam, No.59, 5th Street, Kailash Sector, Kaladipet, Chennai-600 019.
5. T.Hemalatha, D/o Late. Arjunai Pandian, No. 4, V.O.C. Street, Annakaputhur, Chennai-600 070.
6. M. Saraswathi, D/o Late. Arjunai Pandian, No.4, V.O.C. Street, Annakaputhur, Chennai-600 070.
7. Salara, D/o Late. Arjunai Pandian, No.4, V.O.C. Street, Annakaputhur, Chennai-600 070.

... Respondents

All persons claiming to have any interest in the estate of the above named Late. S.S.Mariappa Nadar who was residing at No. 159, Thiruvotriyur High Road, Kaladipet, Chennai-600 019 and who died on 26.04.2016 are hereby cited to come and see the proceedings, before the Learned Master sitting in the Original Side of the High Court of Judicature at Madras on 17.08.2018 at 10.30 a.m. and file their objections, if they think fit before the grant of Letters of Administration.

Dated at Chennai on this 01st day of August, 2018.

Sd/-
(I. Muhammed Saleem)
Asst. Registrar, Original Side,
High Road, Chennai-104.

Mr. M.N.S. Mohammed Habeeb Raja, Advocate for Petitoner, Old No. 242 (New No. 158), Linghi Chetty Street, 1st Floor, Chennai - 600 001.

**NAME CHANGE**

I, RAJASEKARAN MUTHUVEERAPPAN, S/o Muthuveerappan, born on 08.10.1950, residing at No.30/6, Door No S1, Sundaram Colony, Periyalwar Street, East Tambaram, Chennai - 600059, shall henceforth be known as GIVEN NAME: RAJHASEKHAREN.SUR NAME: TRICHY MARUTHANAYAGAM MUTHUVEERAPPAN.

RAJASEKARAN MUTHUVEERAPPAN.

**MARG** Spirit of Visioneering
**MARG LIMITED**
CIN : L45201TN1994PLC029561
Regd. Off.: 'Marg Axis', 4/318, Rajiv Gandhi Salai, Kottivakkam, Chennai – 600 041.
Tel.: +91-7825888140; mail:investor@marggroup.com; website: www.marggroup.com

NOTICE OF BOARD MEETING

Notice is hereby given that pursuant to Regulation 29 read with Regulation 47 of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations 2015, a meeting of the Board of Directors of the Company will be held on Tuesday, the 14th August, 2018 at the Registered Office of the Company at 'Marg Axis', 4/318, Rajiv Gandhi Salai, Kottivakkam, Chennai – 600 041, inter -alia to consider and approve the un-audited Financial Results for the Quarter ended 30th June, 2018.

Sd/-
G R K Reddy
Chairman & Managing Director

Place: Chennai
Date: 09.08.2018

Aaryan **ARYAN SHARE AND STOCK BROKERS LIMITED**
CIN-L65993TN1995PLC031800
Regd.Add.-Old No.3, New No.7, 7th Cross Street, Shenoy Nagar, Chennai TN 600 030,
Email:aryan@assbl.com, Website: www.assbl.com, Contact: 4202 1600

EXTRACT OF THE STANDLONE UNAUDITED RESULTS FOR THE QUARTER ENDED 30TH JUNE,2018 (Rs in lakhs)

| S. No | Particulars | QUARTER ENDED 30.06.2018 Unaudited | YEAR ENDED 30.06.2017 Unaudited |
|---|---|---|---|
| 1 | Total Income from Operations (Net) | 76.17 | 84.37 |
| 2 | Net Profit / (Loss) for the period before tax and Exceptional items | 15.61 | 61.74 |
| 3 | Net Profit / (Loss) for the period before tax and after Exceptional items | 15.61 | 61.74 |
| 4 | Net Profit for the period after Tax (after Extraordinary Items) | 11.59 | 45.81 |
| 5 | Total Comprehensive Income for the period | 11.59 | 45.81 |
| 6 | Equity Share Capital | 300.00 | 300.00 |
| 7 | Reserves(Excluding Revaluation Reserves as at balance sheet date) | 920.02 | 924.83 |
| 8 | Earning per Share-Basic(after extraordinary items) (of Rs. 10/- each) | 0.39 | 2.06 |
| | Earning per Share-Diluted(after extraordinary items) (of Rs. 10/- each) | 0.39 | 2.06 |

NOTES:
(1) The above result is an extract of the detailed format of financial results for the quarter ended 30th June,2018 filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (LODR) Regulation 2015. The full format of the Quarterly Result as on 30th June,2018 is available on company website.
(2) The above unaudited Financial results for the quarter ended 30th June 2018 were reviewed by the Audit Committee at their meeting held on 08th August 2018 and approved by the Board of Directors at their meeting held on 08th August,2018

BY ORDER OF THE BOARD
For ARYAN SHARE AND STOCK BROKERS LTD.,
SHANMUKH N SHAH
MANAGING DIRECTOR.
DIN : 00554879

Place: Chennai
Date: 08th August,2018

**PANASONIC CARBON INDIA CO. LIMITED**
(CIN:L29142TN1982PLC009560)
Regd.Office : "POTTIPATI PLAZA" III FLOOR, NO. 77, NUNGAMBAKKAM HIGH ROAD NUNGAMBAKKAM, CHENNAI 600 034 PH: 044-28275216/26 FAX:044-28263010
Web: www.panasoniccarbon.co.in

Statement of Standalone Unaudited financial results for the quarter ended 30th June 2018(in lakhs)

| | Quarter ended 30.06.2018 | Quarter Ended 30.06.2017 |
|---|---|---|
| Total Income | 1,409.27 | 1,373.76 |
| Net Profit/ (Loss) for the period (before Tax and Exceptional items) | 488.04 | 475.75 |
| Net Profit/ (Loss) for the period (before tax and after Exceptional items) | 488.04 | 475.75 |
| Net Profit/ (Loss) for the period (after tax and after Exceptional items) | 343.02 | 306.66 |
| Total Comprehensive Income for the period | Nil | 5.69 |
| Equity Share Capital (Face Value of Rs.10/- per Share) | 10.00 | 10.00 |
| Earnings Per Share of Rs.10 each- Basic (not annualised) | 7.15 | 6.39 |
| Earnings Per Share of Rs.10 each- Diluted (not annualised) | 7.15 | 6.39 |

NOTE:
1. The above results for the Quarter/year ended 30th June, 2018 have been reviewed by the Audit Committee and approved by the Board of Directors in their meetings held on 8th August 2018 and Statutory Auditors of the Company have carried out a Limited Review
2. The above is an extract of the detailed format of Quarterly Financial results filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly Financial results are available on Stock Exchange website namely www.bseindia.com and on the Company's website www.panasoniccarbon.co.in

For Panasonic Carbon India Co. Ltd
R. SENTHIL KUMAR
MANAGING DIRECTOR

Place : Chennai
Date : 8th August, 2018